காற்றடிக்கும் திசைகள் எல்லாம் போகும் எங்கள் படகு
காலைவரை துடிக்கும் ஐயா கரையினிலே உறவு 2
பாட்டில் எங்கள் கதையை சொன்னால் பச்சைமரம் எரியும்
பாடும் எங்கள் சோகம் இங்கு யாருக்கடா புரியும்
யாருக்கடா புரியும் யாருக்கடா புரியும்

காற்றடிக்கும் திசைகள் எல்லாம் போகும் எங்கள் படகு
காலைவரை துடிக்கும் ஐயா கரையினிலே உறவு

கடல்லம்மா கடல்லம்மா நீ கரையை தழுவடி.
அங்கு கண் சொரியும் எங்களது உறவை தடவடி.
படகேறி வந்தோமடி உனது மடியிலே
நீ பார்த்து பார்த்து மீனை போடு வலையின்மடியிளே

காற்றடிக்கும் திசைகள் எல்லாம் போகும் எங்கள் படகு
காலைவரை துடிக்கும் ஐயா கரையினிளே உறவு

ஈழத்தமிழ்மீனவரே சோகம் அது நீளும்
இங்கிருந்து பாடுவது எங்குவரை போகும் 2
நீலக்கடல்புலிகளினால் நாளை இது மாறும்
நீண்ட கடல் வெளிகள் எல்லாம் எங்களுக்காய் ஆகும் 2
பால் சரிக்கும் நிலவு பாய் விரித்து உலவு
எங்கள் கடல் புலிகளினால் கையில்வரும் உலக்கு

காற்றடிக்கும் திசைகள் எல்லாம் போகும் எங்கள் படகு
காலைவரை துடிக்கும் ஐயா கரையினிளே உறவு

வெள்ளிமணி காட்டுகின்ற நல் இரவு நேரம்.
வீசும் கடல் அலைகளினால் தேகம் எல்லாம் ஈரம் 2
தள்ளி வந்து ஆண்டதெல்லாம் இன்று அதன் கோலம்
அண்ணன் பிரபாகரனால் நாளை தமிழீழம் 2
நேவி வரும் படகு தூரத்திலே தடவு
எங்கள் கடல்புலிகளினால் இன்று அவன் தொலைவு

காற்றடிக்கும் திசைகள் எல்லாம் போகும் எங்கள் படகு
காலைவரை துடிக்கும் ஐயா கரையினிளே உறவு